State Project Directorate
0 8 DEC 2023
4730
Samagra Shiksha, Chennai-6

சுருக்கம்

பள்ளிக் கல்வி – ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி – ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வியில் தொடக்கக் கல்வி நிலையில் பணியாற்றும் சிறப்பு பயிற்றுநர்கள் – மதிப்பூதியம் ரூ.20,000/-லிருந்து ரூ.25,000/- ஆக உயர்த்துதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

**பள்ளிக் கல்வித் (அகஇ2) துறை**

அரசாணை (நிலை) எண். 234 நாள் 07.12.2023

**திருவள்ளுவர் ஆண்டு 2054**
**சோபகிருது வருடம், கார்த்திகை 21**

**படிக்கப்பட்டது**

JSPD
f.a.d CAO
discuss

மாநிலத் திட்ட இயக்குநர், ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி அவர்களின் கடித ந.க.எண்.3124/அ3/ஒபக/2023, நாள் 11.08.2023.

********

ஆணை:-

மேலே படிக்கப்பட்ட கடிதத்தில் ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி, மாநிலத் திட்ட இயக்குநர் தமிழ்நாடு ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வித் திட்ட மாற்றுத்திறன் மாணவர்களுக்கான சிறப்பு பயிற்றுநர்கள் (தொடக்கக் கல்வி) சங்கத்தின் சார்பில் தங்களது மதிப்பூதியத்தினை ரூ.20,000/-லிருந்து ரூ.25,000/- ஆக உயர்த்தி வழங்கிடவும், காலமுறை ஊதியம் வழங்கிடவும், பணியினை நிரந்தரம் செய்திடவும் தொடர்ந்து கோரிக்கைகள் அளித்து வருகின்றனர். தமிழ்நாட்டில், மாற்றுத்திறன் மாணவ, மாணவிகளின் நலன் கருதி, குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம், 2009 இன்படி, மாற்றுத்திறனுடைய பள்ளி வயதில் உள்ள அனைத்து மாணவ, மாணவிகளும் அருகாமையில் உள்ள பள்ளியில் சேர்க்கை அளித்தும் அவர்களின் மாற்றுத்திறன் தன்மையை பொறுத்து அவர்களுக்கான சிறப்புக் கல்வியும், சிகிச்சை / பயிற்சிகளும் சிறப்பு பயிற்றுநர்களால் ஆயத்த பயிற்சி மையங்களில் வழங்கப்பட்டு வருகின்றன. ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வியில் தற்பொழுது தொடக்கக் கல்வி நிலையில் 1995 சிறப்பு பயிற்றுநர்கள் மற்றும் இயன்முறை மருத்துவர்கள் பணியாற்றி வருகிறார்கள். தொடக்கக் கல்வி நிலையில் பணியாற்றும் சிறப்பு பயிற்றுநர்களுக்கு வழங்கப்பட்டு வரும் மதிப்பூதியம் குறித்து பின்வரும் விவரங்களை தெரிவித்துள்ளார்.

| வருடம் | தொண்டு நிறுவனம் / அனைவருக்கும் கல்வித் திட்டம் | மாத மதிப்பூதியம் |
|---|---|---|
| 2010-2011 | தொண்டு நிறுவனம் | ரூ.7500/- |
| 2011-2012 | தொண்டு நிறுவனம் | ரூ.8500/- |
| 2012-2013 | அனைவருக்கும் கல்வித் திட்டம் | ரூ.10,000/- |
| 2013-2014 | அனைவருக்கும் கல்வித் திட்டம் | ரூ.11,000/- |

| | | |
|---|---|---|
| 2014-2015 | அனைவருக்கும் கல்வித் திட்டம் | ரூ.14,000/- |
| 2015-2017 | அனைவருக்கும் கல்வித் திட்டம் | ரூ.15,000/- |
| 2017-2019 | ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி | ரூ.16,000/- |
| 2019-2022 | ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி | ரூ.18,000/- |
| நவம்பர் 2022 | ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி | ரூ.20,000/- |

2. ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி, மாநிலத் திட்ட இயக்குநர் தற்பொழுது இடைநிலைக் கல்வி நிலையில் பணியாற்றும் 202 சிறப்பு பயிற்றுநர்களைக் கொண்டு 9 முதல் 12 வரை பயிலும் சுமார் 60,000 மாணவர்களுக்கு சிறப்புக் கல்வி அளிப்பது என்பதில் கடினமான சூழல் உள்ள நிலையில் உரிய நேரத்தில் அம்மாணவர்களுக்கு அளிக்கப்பட வேண்டிய திட்டங்கள் சென்றடைவதில் காலதாமதம் ஏற்படுவதனை களைய ஒவ்வொரு ஒன்றியத்திலும் 1 முதல் 12 வரை பயிலும் மாற்றுத் திறன் கொண்ட மாணவர்களை அவ்வொன்றியத்தில் உள்ள தொடக்க நிலை மற்றும் இடைநிலையில் பணியாற்றும் சிறப்பு பயிற்றுநர்களுக்கு சமமாக பிரித்தளிக்க வேண்டிய அவசியம் எழுந்துள்ளது எனவும் சிறப்பு பயிற்றுநர்களின் மதிப்பூதியத்தினை உயர்த்துவதால் கூடுதல் செலவினம் ரூ.11.97 கோடி ஏற்படும் எனவும் தெரிவித்து ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வியில் தொடக்கக் கல்வி நிலையில் பணியாற்றும் 1995 சிறப்பு பயிற்றுநர்களுக்கு தற்போது மாதம் ஒன்றிற்கு வழங்கப்படும் மதிப்பூதியத்தினை ரூ.20,000/-லிருந்து ரூ.25,000/- ஆக உயர்த்தி வழங்குமாறு அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

3. மேலே பத்தி 2ல் உள்ள ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி, மாநிலத் திட்ட இயக்குநரின் கருத்துருவினை அரசு நன்கு பரிசீலித்து ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வியில் தொடக்கக் கல்வி நிலையில் பணியாற்றும் 1995 சிறப்பு பயிற்றுநர்களுக்கு மாதம் ஒன்றிற்கு வழங்கப்படும் மதிப்பூதியத்தினை ரூ.20,000/-லிருந்து ரூ.25,000/- ஆக உயர்த்தி ஆணையிடுகிறது. மேலும், இச்செலவினத்தினை மேற்கொள்ள தேவையான கூடுதல் நிதியொதுக்கம் ரூ.11,97,00,000/- க்கு நிர்வாக அனுமதியும் நடப்பு நிதியாண்டிற்கு மீதமுள்ள நான்கு மாதத்திற்கு மட்டும் ரூ.3,99,00,000/- (ரூபாய் மூன்று கோடியே தொண்ணூற்று ஒன்பது இலட்சம் மட்டும்) நிதி ஒதுக்கீடு செய்தும் இத்திட்டம் ஒருதொடர் செலவினம் என்பதால் 2024-2025ஆம் ஆண்டிற்கு வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் தேவையான நிதியை ஒதுக்கீடு செய்யுமாறு அரசு ஆணையிடுகிறது.

4. மேலே பத்தி 3ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் கீழ்க்கண்ட கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

2202 பொதுக்கல்வி – 01 தொடக்கக் கல்வி – 101 அரசு தொடக்கப் பள்ளிகள் – மாநிலச் செலவினங்கள் – AF -ஒருங்கிணைந்த கல்வி இயக்ககத்தின் கீழ் சிறப்பு பயிற்றுநர்களுக்கான மதிப்பூதிய துணை மானியம் – 309 உதவித் தொகை – 03 குறிப்பிட்ட திட்டங்களுக்கான உதவித் தொகை

(IFHRMS த.தொ.2202 01 101 AF 309 03)

5. மேலே பத்தி -3ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்தினை மேற்கொள்ள தேவையான கூடுதல் நிதியொதுக்கம் ரூ.3,99,00,000/- 2023-2024ஆம் நிதி ஆண்டிற்கான திருத்த மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் ஒதுக்கீடு

செய்யப்படும். இருப்பினும் மேற்கண்ட செலவினம் 2023-2024ஆம் நிதி ஆண்டிற்கான துணை மானியக் கோரிக்கையில் கொணர்ந்த சட்டமன்றப் பேரவையின் ஒப்புதல் பின்னர் பெறப்படும். இந்நிதியொதுக்கம் செய்ய இருப்பதை எதிர்நோக்கி மேலே பத்தி 3-இல் ஒப்பளிக்கப்பட்ட தொகையினை பெற்று வழங்கிட மாநில திட்ட இயக்குநர், ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி அவர்களுக்கு அனுமதி அளிக்கப்படுகிறது. மேலும் பத்தி 3-இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்தை 2023-2024ஆம் நிதி ஆண்டிற்கான துணை மதிப்பீடுகளில் சேர்ப்பதற்கு உரிய வரைவு விளக்கக்குறிப்பினையும் மற்றும் திருத்த மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் சேர்ப்பதற்கு உரிய கருத்துருவையும் தவறாது நிதித்(கல்வி -2/ வ.செ.பொ-I) துறைக்கு அனுப்பி வைக்குமாறு மாநில திட்ட இயக்குநர், ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

6. மேற்கண்ட புதிய கணக்குத் தலைப்பிற்கு மாநில திட்ட இயக்குநர், ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி, சென்னை அவர்கள் மதிப்பீடு, கணக்கு நேரமைப்பு மற்றும் கட்டுபாட்டு அதிகாரியாவார். மேற்படி புதிய கணக்குத் தலைப்பினை தங்களது பதிவேடுகளில் துவங்கிக் கொள்ளுமாறு சம்பந்தப்பட்ட சம்பளக் கணக்கு அலுவலர் / கருவூல அலுவலர் அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

7. இவ்வரசாணை நிதித்துறையின் அ.சா.கு.எண்.4339/நிதி-II/2023, நாள் 07.12.2023இல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது. கூடுதல் நிதி ஒதுக்கப் பேரேட்டு எண்.1435 (ஆயிரத்து நானூற்று முப்பத்தைந்து).

(IFHRMS ASL No.2023121435)

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**ஜெ.குமரகுருபரன்,**
**அரசு செயலாளர்.**

**பெறுநர்**
மாநிலத் திட்ட இயக்குநர்,
ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி, சென்னை – 6.
பள்ளிக் கல்வி இயக்குநர், சென்னை – 6.
தொடக்கக் கல்வி இயக்குநர், சென்னை - 6.
மாநிலக் கணக்காயர், சென்னை – 18/35.
சம்பளக் கணக்கு அலுவலர்,
சார்ந்த முதன்மைக் கல்வி அலுவலர்.
சார்ந்த கருவூல அலுவலர்கள்.
**நகல்**
நிதி (கல்வி-II)த் துறை, சென்னை – 9.
இருப்பு கோப்பு / உதிரி நகல்

**// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//**

**பிரிவு அலுவலர்**